விலை ரூபா: 5.00 | பக்கங்கள் :- எட்டு | Registered as a News paper in Sri Lanka

தங்கத் தரணியில்
தனியிடம் வகிப்பவர்கள்
சிறீ மாரி

நகை மாடம்
49, [187], கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆனி 32 | செவ்வாய்க்கிழமை (16.07.2002) | தொலைபேசி 3378 | ஒலி 209



சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப்பேரணியையும், இராணுவ வாகனத்தை பேரணியில் வந்தவர்கள் வழிமறிப்புச் செய்வதையும் படங்களில் காணலாம். (படம்:திருநீபன்)

# சாவகச்சேரியில் நேற்று மாபெரும் மக்கள் பேரணி

## கண்டனக்கூட்டமும் வீதிமறிப்பும் இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்களை நிறைவேற்றக் கோரியும், புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் நடவடிக்கைகளில் இராணுவம் செயற்பட்டு வருவதைக் கண்டித்தும் நேற்று தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியில் மாபெரும் கண்டனப்பேரணி நடத்தப்பட்டது.

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றஇம் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்றலில் இருந்து காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

பிரதான வீதி வழியாக சென்ற பேரணியில் கலந்து கொண்ட மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பிய வண்ணம் சென்றனர். தென்மராட்சி பிரதேச செயலக பணிமனையை பேரணி

(08ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு தலைவர் நேற்று வன்னி செல்லவில்லை

## இன்று சந்திப்பு இடம்பெறலாம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே நேற்று வன்னியில் நடைபெறவிருந்த சந்திப்பு இடம்பெறவில்லை.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் இருவர் தடுத்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பாக ஆராய யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

எனினும் இச் சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை பெரும்பாலும் இன்று சந்திப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஆ)

## இரணைதீவுக் கடல் விவகாரம்

# நோர்வேயின் பிரதி அமைச்சர் பாலசிங்கத்தை சந்திப்பார்!

## ஹெவ்டேயின் அறிக்கை ஆராயப்படும்

(நமது நிருபர்)

இரணைதீவு கடற்பிரதேசத்தில் கடந்த 13ம் திகதி இடம்பெற்ற யுத்

## வன்னிக்கு வருமாறு கூட்டமைப்பு எம்.பிகளுக்கு புலிகள் அழைப்பு

(நமது நிருபர்)

**இரணைதீவு கடற்பிரதேசத்தில் கடந்த 13ம் திகதி இடம்பெற்ற யுத்தநிறுத்த மீறல் சம்பவம்தொடர்பாக நோர்வேயின்பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை விரைவில் சந்தித்து பேசவுள்ளார்.**

கடந்த 13ம்திகதி சனிக்கிழமை இரவு இரணைதீவுக் கடற்பரப்பில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை விடுதலைப்புலிகள் மீறியுள்ளதாக யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே அறிக்கை ஒன்றின் மூலம் புலிகள் மீது குற்றம் சுமத்தியிருந்தார்.

கண்காணிப்புக்குழுத் தலைவரின் குற்றச்சாட்டை மறுத்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் (08ம் பக்கம் பார்க்க)

## எம்.பிகளுக்கு புலிகள் அழைப்பு

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இம்மாதம் 27ம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு கிளிநொச்சிக்கு வருகை தருமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அழைப்புவிடுத்துள்ளனர்.

இந்த அழைப்பை தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொலைநகல் மூலம் அனுப்பிவைத்துள்ளார். இவ் அழைப்பு ஈ.பி.ஆ.எல்.எவஇன் சுரேஸ் பிறேமச (08ம் பக்கம் பார்க்க)

விசாரணைக்கு சமூகமளிக்காத

## யாழ். பல்கலை மாணவரை கைது செய்ய நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக மாணவர் குழுக்களிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளுக்கு சமூகமளிக்காத மாணவர்களினை உடன் கைது செய்யுமாறு யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராஜா யாழ் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 7ம், 8ம், 10ம் திகதிகளில் பல்கலைக்கழக மாணவர்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய (08ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடுகளுக்கு ஜனாதிபதி செல்வார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அமெரிக்க விஜயத்தின் பின்பே ஜனாதிபதி தனது ஐரோப்பிய விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.(ம)

## பகிரங்கவிவாதத்திற்குவருமாறு பிரதமருக்கு ஜே.வி.பி அழைப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் நந்தனகுணதிலக அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற அண்மைக் கால வன்முறைச்சம்பவங்களில் ஜே.வி.பிக்கும் தொடர்பு இருக்கின்றது என்று பிரதமர் விக்கிரமசிங்கா பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பாக குற்றங்களை நிரூபிக்கத் தன்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு நந்தன குணதிலக கோரிக்கைவிடுத்துள்ளார். (இ)

# சுயாதீன ஆணைக்குழுவினர் நேற்று யாழ். வந்துசேர்ந்தனர்

(திருநெல்வேலி)

கடந்த மாதம் வேலணையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணையை நடத்தும் பொருட்டு எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தலைமையிலான சுயாதீன ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று மாலை 3மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இக் குழுவில் இளைப்பாறிய நீதிபதி ஏ.பி. வீரசிங்க, பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர் நாவலக்க கலுவெல ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

இவ் அதிகாரிகள் விடுதலைப்புலிகளால் நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுவினர் யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

இன்று யாழ். செயலகத்தில் (08ம் பக்கம் பார்க்க)

## வை.கோ.கைது நால்வர் தீக்குளிப்பு

திராவிட முன்னேற்ற கழகபொதுச் செயலாளர் வை.கோபாலசாமி கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்நாட்டில் நான்கு பேர் தீக்குளித்துள்ளனர்.

வைகோ வாழ்க என்று கூறியபடி இவர்கள் தீக்குளித்து இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

## பஸ் கட்டணம் குறையும்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப பஸ் கட்டணமும் குறைக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்துள்ளார்.

50சதம் முதல் 5ரூபா வரையில் பஸ் கட்டணம் குறைப்புச் செய்யப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். (த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியல் - ஆயுதம் - எழுத்தாற்றல்

# முத்திறன்வாய்ந்தவர் உமாமகேஸ்வரன்

## இன்று அவரின் 13-வது நினைவுதினம்

தெல்லிப்பழை வறுத்தலைவிளானைச் சேர்ந்த ஆசிரியர் க. கதிர்காமருக்கும் க. பரம்சோதிக்கும் இரண்டாவது பிள்ளையாகவும் சிரேஷ்ட புத்திரனாகவும்1945ம்ஆண்டு மாசிமாதம் 18ம்திகதிபிறந்த உமாமகேஸ்வரன் தன்கல்வியை ஆரம்பம்முதல் இறுதிவரை யாழ் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கற்றார். இவருக்கு 5 சகோதரர்கள், மகாஜனாக் கல்லூரியில் இவர் கல்வி கற்கும் காலத்தில் கல்வியில் முதல்தர மாணவனாகவும் ஒழுக்கம் பண்பு ஆன்மீகம் போன்றவற்றிலும் மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்ததுடன் விளையாட்டுத்துறையிலும் ஒருமுதல்தர வீரனாக திகழ்ந்தார், உதைபந்தாட்டத்தில் எதிர்தரப்பில் ஒவ்வொரு அசைவையும் மிகநுணுக்கமாக நோக்கி அவர்கள எதிர்பாராத நிலையில் அவர்களுக்கிடையேபுகுந்துபந்தை உதைத்துச்சென்று கோல் போடுவதில் மிகவும் அசகாயசூரனாகவிளங்கினார் இவருடைய இந்த திறமைதான் இவர் பிற்காலத்தில் எதிரிகள் கிலி கொள்ளுமளவிற்கு இவருடைய இராணுவ நடவடிக்கைகள் வளர்வதற்கு உதவின என்றால் மிகையாகாது. இவருடைய திறமையினால் முதன்முதலாக மாவட்டமட்டத்தில் மகாஜனாக் கல்லூரி உதைபந்தாட்ட சம்பியன்ஆவதற்கு வழிவகுத்தவர் இன்றும்தெல்லிப்பழை உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் நடைபெற்று வரும் அமரர் பொன்னம்பலம்ஞாபகார்த்த வெளளிக்கிண்ண போட்டியை ஆரம்பித்து வைத்த பெருமை இவரைச் சேரும்,

தனது கல்வியை முடித்துக் கொண்ட இவர் 1966தொடக்கம் பத்துஆண்டுகள் நிலஅளவையாளராக கடமையாற்றினார் நிலஅளவைத் திணைக்களத்தில் வருடாவருடம் நடத்தப்பட்டுவந்த இறுதிப்பரீட்சை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமல்லாது 1967முதல் தமிழிலும் நடத்துவதற்கு முதல்குரல் கொடுத்து அதில் வெற்றியும் கண்டார். 1967முதல்தமிழில் பரீட்சைநடைபெற வழிவகுத்ததுடன் நிலஅளவைத் திணைக்கள சட்டதிட்டநூல்களை தமிழில்மொழிபெயர்க்கும் குழுவில் இவரும் இருந்தார். இந்தக்காலப்பகுதியில் இவர்பலவிதமான தமிழர் போராட்டம் சம்பந்தமான இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார் 1977ம்ஆண்டு ஒமான்நாட்டின் அரசதிணைக்களத்தில் இலங்கையின் முதல் நில அளவையாளராக வேலைவாய்ப்பு கிடைத்தும் அங்கு செல்லமறுத்தார் நண்பர்கள் செல்லமறுத்ததன் காரணம் வினாவியபொழுது நாம் சொந்தநலனுக்காக வெளிநாடுசென்றால் தமிழினவிடிவிற்கு யார் உழைப்பது என்பதேஅவரின் பதிலாக அமைந்தது.

கல்வி கற்கும் காலத்திலேயே தமிழரசுக்கட்சியில் தீவிர ஆதரவாளனாக இருந்தவர் பின் தந்தைசெல்வாவின் விசுவாசத்திற்கும் அண்ணன் அமிர்தலிங்கத்தின் நெருங்கிய நண்பனாகவும் தோள்கொடுத்து நின்றார்1975ம்ஆண்டு பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழ பிரகடன மாநாட்டில் காவல்துறையினர் பொதுமக்களை தாக்கியதை தாங்காது காவல்துறையினருடன் எதிர்த்து நின்று வாதிட்டதாக கைது செய்யப்பட்டு 45நாட்கள் யாழ்சிறையில் சித்திரவதைப்பட்டார் அணிசேராமாநாடு கொழும்பில் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி ஆட்சியில் நடைபெற்றபொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினைகள்பற்றி நூலாக அச்சிட்டு கடும்காவல்களின் மத்தியில் இருந்த மாநாட்டில் பங்குபற்றவந்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிளுக்கு மாறுவேடத்தில்சென்று விநியோகித்து தமிழர்களின் பிரச்சினையை உலகறியச் செய்தவர்.

**யதார்த்தன்**

1980களின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைக் கழகம் எனும் பெயரில் தோழர்களுடன் சேர்ந்து தனது சமூக பொருளாதார அரசியல் வேலைத்திட்டங்களை புதிய உத்வேகத்துடன் முன்னெடுத்துச் சென்றதோடு மட்டுமல்லாமல் எமது மண்ணையும் மக்களையும் காப்பாற்ற வேண்டுமானால் ஒரு நீண்டகால அரசியல் இராணுவ வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் தனியே ஒரு இளைஞர் குழு மட்டும் ஒரு கெரில்லாப் போராட்டத்தை நடாத்தி ஒரு முழுமையான விடுதலையைப் பெற முடியாது என்ற உலகப்புரட்சிகர போராட்டங்களின் வரலாற்று அனுபவத்தைக் கொண்டு ரந்துபட்ட மக்கள் போராட்டத்தின் ஊடாகவே ஒரு முழுமையான விடுதலையைப் பெற முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில்கிராமங்கள், நகரங்கள் தோறும் தோழர்களை அனுப்பி வெகுஜன அமைப்புகளை நிறுவியதுடன், தமிழீழ விடுதலைக் கழகம் என்ற கழகத்தின் பெயரை தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம்எனப் பெயர் மாற்றம் செய்தார்.

1976ல் இவர் போராட்ட இயக்கங்களின் சர்வதேசபயிற்சிப் பாசறையாக விளங்கிய பாலஸ்தீன விடுதலை இயக்கதின் P. L. O தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முறையாக பயிற்சி பெறச் சென்ற இருவரில் இவரும் ஒருவர். P. L. O வின் விஷேட இராணுவப் பயிற்சியைமுடித்துக்கொண்ட இவர் சிறப்பு அரசியல் பயிற்சியையும் முடித்துக் கொண்டு நாடு திரும்பினார்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் அரசியலும் இராணுவமும் இரு சமாந்தரக் கோடுகளாக செல்லவேண்டியவை எனவும் இதில் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் காணப்படுமானால் அது உரிமைப்போராட்டத்தையே திசைதிருப்பிவிடும் என்று எடுத்துக் கூறியதுடன் கழகத்தை சரியான வழியில் வழிநடத்திச் சென்றவர். எந்த ஒரு இனமும் தனது தலைவிதியை தானே தீர்மானிக்க வேண்டுமேயொழிய ஏனைய சக்திகள் இதில் புகுந்துவிடக்கூடாது என்பதில் தான் இறக்கும் வரை உறுதியாக இருந்தவர். 1985ல் திம்புப் பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கு காலஞ்சென்ற ஜே ஆர். ஜெயவர்த்தனா அரசு முயற்சிகள் மேற்கொண்ட பொழுது அப்பொழுதிருந்த இராணுவத்தலைமைகளுப் பௌத்த பேரினவாதிகளுப் 'ஒரு சில துப்பாக்கி தூக்கிய இளைஞர்களுக்குப் பயந்தா பேச்சுவார்த்தைக்கு செல்கிறீர்கள்' என்று கேட்டபோது இவர்களைப்போல் ஆயிரம் துப்பாக்கிக்காரர்களுக்கும் நான் பயப்படமாட்டேன். ஆனால் இந்த உமாமகேஸ்வரனின் பேனாவிற்குப் பயந்தே தான் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்கிறேன் என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறுமளவிற்கு தனது எழுத்தாற்றலால் ஈழத்தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்தவர்.

மானுடத்தின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டுவந்த தோழர் அமரர் உமாமகேஸ்வரன் அவர்கள் 16.07.1989 அன்று கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார். இவர் தொடர்ந்து வந்த பாதையை முன்னெடுத்துச் சென்று மானுட மாண்பிற்காக எம்மை அர்ப்பணித்துச் செயற்படுவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

## வங்கி உதவியாளர் பரீட்சை
## சித்தியடைந்த 66 பேருக்கு மேலும் ஓர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த16. 06. 2002அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வங்கி உதவியாளர் பரீட்சையில் சித்தியடைந்த 66 பரீட்சார்த்திகளுக்குமான மற்றுமொரு பரீட்சை, எதிர்வரும் 21. 07. 2002 அன்று மு. ப. 10 30 மணியளவில் கொழு புறோயல்கல்லூரியில் நடைபெறவுள்ளது

குறிப்பிட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைஅனுமதி அட்டைகள் நாளை, மக்கள் வங்கி பிரதேச தலைமை அலுவலகம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வைத்து வழங்கப்படவுள்ளதால் கீழே குறிப்பிடப்பட்ட பரீட்சார்த்திகளை மேற்படி முகவரியில் வந்து சந்திக்கும்படி மக்கள்வங்கியாழ். பிராந்திய தலைமை அலுவலக உதவி முகாமையாளர் கே. ஆனந்தராஜா அறிவித்துள்ளார்.

செல்வி.எஸ். அகல்பா, ஆர். எம். அந்தோனிப்பிள்ளை, செல்வி.எஸ். அனுஷா, செல்வி ஜி. அனுஷா, செல்வி. எஸ். ஆரணி, செல்வி. என் அருணகிரிராஜா, எஸ் எஸ். பகீரதன், செல்வி.எஸ்.பகீரதி, செல்வி. பி. பாலகிருஷ்ணன், செல்வி. பி. பாலசுப்பிரமணியம், செல்வி. ஜி. பாலசுப்பிரமணியம், ரி.எழில்மேனன், ஜி.கஜமுகன், செல்வி. கனேஸ்வரன், கே. கோபிநாத்,

பி. ஹரிஹரேந்திரா, ஜி ஹரின்ஆர்க், ஆர். இளங்குமரன், என். ஜெயமோகன், எஸ்.ஜேறோன், செல்வி.எவ். எக்ஸ்.ஜெயச்சந்திரா, செல்வி வி.ஜெயகுமாரி, செல்வி ஜே. ஜெயரட்னம், செல்வி பி. கைலாசபதி, கே. கஜன், செல்வி. ஆர். கமலமீரா, செல்வி.ஆர் கம்சலா, செல்வி. எஸ். கனகலிங்கம், எஸ். கணநாதன், செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை,

செல்வி. என். கந்தசாமி, எ.எ.கிஷான், செல்வி. என். கோகுலதாஸ், எஸ். கோகுலகாந்த், எஸ் கிருஷ்ணகுமாரன், திருமதி வி. குமாரன், ஈ.மகேந்திரன், எம். மகேந்திரன், செல்வி. ஜி. மாணிக்கவாசகர், ஏ. மன்ஜீவன், செல்வி பி.மனோஜ், செல்வி. எஸ். சிவன்தா, ஆர். முரளீதரன், பி. முருகதாஸ், செல்வி. ஜே. முத்துக்குமாரி,

செல்வி. எஸ். நடராஜா, செல்வி. ஜி. நாகேந்திரன், செல்வி. வி. நரேந்திரன், செல்வி.எம். நிர்மலா, செல்வி ஜி நிஷாந்தி, எஸ்.பகீரதன், செல்வி. வி. பரமநாதன், செல்வி. ஆர். பராபரன், ஆர்.றோகீர், செல்வி. எம். சதாசிவசர்மா, செல்வி. எம். செபஸ்தியாம்பிள்ளை, பி. சீராளன், செல்வி எஸ். செந்தில்நாதன், செல்வி.எஸ். சின்னத்தம்பி, எஸ்.சிவநாதன் செல்வி. எஸ். சிவராஜா, செல்வி. எம். சிறீதரன், எவ். சுதாகரன், எம். தனேஸ், பி. தர்மேந்திரா, என். உதயசாகர்.

## வல்லையில் சட்டவிரோத கல்அகழ்வு மும்முரம்

(நெல்லியடி)

வல்லைப்பகுதியில் சட்டவிரோதமாகக் கல்அகழும் நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இதனால் யாழ் - பருத்தித்துறைவீதிக்கு இருமருங்கிலும் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

இராணுவமுகாமை அண்டிய பகுதிகளில் கல்அகழ்வினால் வீதியோர மரங்கள் பாறிவிழும் அபாயம் ஏற்படலாம் என்றும்;

காலப்போக்கில் வீதியோரங்கள் அரிப்படையும் சந்தர்ப்பம் ஏற்படலாம் என்றும் சுற்றுச்சூழல்ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்— (ஷ- 247)

## நாணயக்குற்றி தொலைபேசி நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு மாற்றம்

(நெல்லியடி)

பொதுமக்களின் பாவனைக்கென நெல்லியடி கொடிகாமம் வீதியில் அமைக்கப்பட்டிருந்த நாணயக்குற்றித்தொலைபேசி நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்குஇடமாற்றப்பட்டுள்ளது

கடந்தகாலங்களில் தொடர்ச்சியாக விசமிகளால் செயலிழக்கச் செய்யப்பட்டு வந்த காரணத்தாலேயே மேற்படி நாணயத் தொலைபேசி ரெலிக்கொம் நிறுவனத்தினால் இடமாற்றப்பட்டுள்ளது

தொலைபேசி பொலிஸ் நிலையத்தினுள் அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் தாம் விரும்பிய நேரத்தில் பயன்படுத்துவதில் சிரமங்களை எதிர்சொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஷ5-247)

## மேயரின் பாவனைக்கு ஓட்டோ வந்துசேர்ந்தது

(நெல்லிபடி)

யாழ் மாநகர முதல்வரின் பாவனைக்கென கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோ கடந்தசனிக்கிழமை யாழ் மாநகரசபைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது

தனது பணிகளைமேற்கொள்ள வாகனவசதியின்றி சிரமமடைந்த மேயர்செ.கந்தையன் தற்போதுஓட்டோ மூலம் தனது செயற்பாடுகளை மேற்கொளவதை அவதானிக்க முடிகிறது

(ஷ-247,6)

## சிறுவர்களுக்கு கற்கைநெறி

(மந்திகை)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் தொழில் திறன் பயிற்சி நெறிகளும் சிறுவர்களுக்கான எழுத்தறிவூட்டல் கற்கை நெறியும் 6 பாடசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி நெறிகள் பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்களுக்கு சுய தொழிலை மேம்படுத்தும் நோக்கத்தோடு கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி கரவெட்டிகோட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் உடையமைத்தல் பயிற்சியும்,

பருத்தித்துறைக் கோட்டத்தில் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில்துணி அச்சிடல், வட இந்து மகளிர் கல்லூரியில் தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து, சென் தோமஸ் றோ.கத்தோலிக்கப் பாடசாலையில் மனை முகாமைத்துவம் பயிற்சியும்

மருதங்கேணி கோட்டத்தைச்சேர்ந்த மணல்காடு றோமன்கத்தோலிக்க பாடசாலையில்14வயதிற்கு உட்பட்டவர்களுக்கு எழுத்தறிவூட்டல் பயிற்சியும்நடத்தப்பட்டு வருகின்றன.

(ஷ-23)

## அரசியல் பிரிவினர் காரைநகர் செல்வர்

(காரைநகர்)

அரசியல் பணி மேற்கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் நாளை புதன்கிழமை காரைநகருக்கு செல்லவுள்ளனர்.

இவர்களின் வருகையையொட்டி காரைநகர் பொது அமைப்புக்கள் இணைந்து மாபெரும் வரவேற்பு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை காலை காரைநகர் செல்லும் அரசியல் குழுவை வலந்தலைச் சந்தியில் வைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும்பொதுமக்கள், மங்கள இசை மற்றும் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன்வரவேற்று யாழ்ரன் கல்லூரிக்கு அழைத்துச் செல்லவுள்ளனர்.

அங்கு மதியம் யாழ்ரன் கல்லூரியில் விருந்துபசாரநிகழ்வு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து மாலை கல்லூரி மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டமும் தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(இ-5, 206)

# இயல்பு நிலையை தோற்றுவிக்க கோரி

# இன்று தீவகத்தில் மும்முனை மறியல் போர்

(ஊர்காவற்றுறை)
தீவகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கக் கோரி தீவக வெகுஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று வேலணையில் மும்முனை மறியல் போராட்டம் இடம்பெறவுள்ளது.

பொதுக் கட்டடங்களில் இருந்து கடற்படையினர் இதுவரை வெளியேறாமை மற்றும் வீதிகள் பொது மக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளமை ஆகியவற்றைக் கண்டித்து இடம்பெறவுள்ள இம் மும்முனை மறியல் போராட்டமானது.

காலை 9.00 மணி முதல் வேலணை வங்களாவடிச் சந்தி, சரவணைச் சந்தி, பஸ்கொம்பனியடிச் சந்தி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பேரணியாகச் சென்று பி.ப. 1 மணியளவில் நிலைப் ஈட்டை விளக்கி வேலணை கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

மேற்படி போராட்டத்திற்கு பொது அமைப்புகள் பலவும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை இன்றைய இப்போராட்டத்தினால் யாழ்ப்பாணத்துக்கும் தீவகத்திற்ம் இடையிலான போக்குவரத்து ஸ்தம்பிதமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-75)

## சூழல் பாதுகாப்புக் குழுவினால் கணனிப் பயிற்சி

(மந்திகை)
வடமராட்சி கிழக்கில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு கணனிப்பயிற்சிவழங்குவதற்கான நடவடிக்கைகளை சூழல் பாதுகாப்புக்குழு மேற்கொண்டு வருகிறது.

இப் பிரதேச மணலினை குடாநாட்டில் விநியோகிக்கும் பணியினை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கும் நிதியினை சூழல் பாதுகாப்புக்குழு மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஷ-23)

## பால் பதனிடும் நிலையப் பணிகள் விரிவடையும்

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலியில் இயங்கி வரும் பால் பதனிடும் நிலையத்தின்பணிகளைவிஸ்தரித்து பலருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கில் அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் பல் வேறு பயன்மிகு உபகரணங்களை வழங்கவுள்ளார்.

பால் கறக்கும் இயந்திரங்கள்,பாலைப் பதப்படுத்தும் உபகரணங்கள்ஆகியன இதில் அடங்கும். (உ-6)

## நடமாடும் சுகாதார சேவை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகரசபையின் அடுத்த நடமாடும் சுகாதார சேவை எதிர்வரும் ஓகஸ்ற் மாதம் 2ஆம் திகதி 20 ஆம் வட்டாரம் மற்றும் நாவாந்துறைப் பகுதிகளில் இடம் பெறவுள்ளது.

இப்பகுதி சனசமூக நிலையங்கள்,சந்தை ஆகிய பகுதிகளில் இச் சுகாதார சேவைகள் இடம் பெறவுள்ளன. (உ-6)

## போடோ சட்டத்தை மறுஆய்வுசெய்ய தீர்மானம் கருணாநிதி வரவேற்பு

(புதுடில்லி)
போடோ சட்டத்தை திருத்துவது தொடர்பாக தேசியஜனநாயக கூட்டணி செய்திருக்கும் முடிவை கருணாநிதி, இராமதாஸ் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் தேசியஜனநாயக கூட்டணிகட்சிகளின் கூட்டம் பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக பத்திரிகையாளர் மத்தியில் கூட்டணியின் அமைப்பாளரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜோர்ஜ் பெர்ணான்டஸ்தெரிவித்துள்ளார்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றச்சங்க பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி கைதுசெய்யப்பட்டது கூட்டணிக்கு ஆழ்ந்தகவலையை ஏற்படுத்திஉள்ளது

போடோ தடைச் சட்டம் தவறாக பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக இச்சட்டத்தில்பாதுகாப்பு அம்சங்களை கொண்டுவருவது குறித்து அரசுபரிசீலிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படாதவாறு பாதுகாப்பு அம்சங்களுடன் திருத்தங்கள் செய்யப்படுவது அவசியம் என திராவிட முன்னேறறக்கழகத் தலைவர் கருணாநிதியும் பாட்டாளிமக்கள் கட்சித்தலைவர் டாக்டர்ராமதாஸும் நேற்று செய்தியாளர்களிடையே தெரிவித்துள்ளார்

போடோதடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்தி ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோஉட்பட 8பேரை தமிழக அரசுகைதுசெய்திருக்கும் சூழ்நிலையில் இச்சட்டத்தின் விதிகள் பற்றி மறுஆய்வு செய்யப்படவேண்டியது அவசியம் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார் (உ-8)

## மலையகப் பாடசாலைகளில் வடக்கு - கிழக்கு ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)
மலையகத்தமிழ்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்க,வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை நியமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண கல்வியமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் மஸ்செலிய சென் ஜோசப் தமிழ் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும்முகமாக இன்னும்3மாதத்தினுள் இந்தியாவிலிருந்து 250 ஆங்கில ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது குறித்தும்பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## ரொக்கட் தாக்குதல் ஐவர் பலி

(ஜெருசலேம்)
பலஸ்தீன காஸா நிலப்பரப்பில் இஸ்ரேலின் விமானப் படையினர் ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன.

பலஸ்தீன காவல் துறைக் கட்டடங்கள்மீது இரு உலங்கு வானூர்திகளும், விமானங்களும் இணைந்து இத் தாக்குதல்களை நடத்தியதில் ஐவர் பலியாகியுள்ளனர். (உ)

## பேரணியில் ஒலித்த கோஷங்கள் சில

(திருநெல்வேலி)
நேற்றைய தினம் தென்மராட்சியில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் பேரணியில் ஒலித்த கோஷங்கள்சில;

- அரசே புரிந்துணர்வை மதித்து நட
- மீனவரின் வயிற்றில்அடிக்காதே
- மீனவர் சுதந்திர மாக தொழில் செய்ய விடு
- எங்கள் கல்விக் கூடங்கள் உங்கள் ஆயுதக் களஞ்சியங்களா?
- எங்கள் கோயில்கள் உங்கள் கூடாரங்களா?
- எங்கள் உயிரான பனைகளை அழிக்காதே
- செத்த உடல்களைக்கூட தகனம் செய்ய முடியாதா?
- கோவில்களுக்கு சுதந்திரமாகச் செல்ல விடு

(உ-13)

## வடமராட்சிப் பகுதி தபாலகங்களுக்கு தொலை நகல் வசதி

(மந்திகை)
வடமராட்சி பகுதியிலுள்ள பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறை தபால் நிலையங்களுக்கு தொலை நகல் வசதி செய்யப்படவுள்ளது.

இதற்காக மேற்படி தபால் நிலையங்களுக்குதொலைநகல் இயந்திரம் தபால் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஊடகத்துறை அமைச்சர்இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தபால்திணைக்கள அதிகாரிகளிடம் ஒரு தொகுதி உபகரணங்கள் கையளித்திருந்தமை தெரிந்ததே. (உ-23)

## மண்டைதீவு மக்கள் மீளக்குடியமர இன்னும் அனுமதி இல்லை

(கல்வயல்)
தீவுப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்று வரவும் தங்குவதற்கும் அனுமதிக்கப்படுகின்ற போதிலும் மண்டை தீவுமக்கள் பலவருடங்களாகியும் குடியேறி தமது இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை உள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இறுக்கமான கட்டுப்பாட்டுடன் இப்பகுதியினுள் சிலர் சென்று தமது வீடுகளைப் பார்த்து வர அனுமதிக்கப்படுகின்றனரே ஒழிய அங்கு தங்குவதற்கு அனுமதிக்கப் படுவதில்லை என்றும்,

அங்குள்ள இந்து கிறிஸ்தவ ஆலயங்கள் புல்பூண்டு மண்டிக் கிடப்பதாகவும் மீன்பிடி உபகரணங்கள் உட்பட பல வளங்களும் அழிந்துள்ளதாகவும் அங்கு சென்று திரும்பிய மக்கள் தெரிவித்தனர்.

இடம் பெயர்ந்த இப்பகுதி வாசிகள் பல சிரமங்களின் மத்தியில் யாழ். நகரப்பகுதி உட்பட குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும்வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஷ-111)

## வை. கோவின் விடுதலைக்காக தமிழர் குரல் கொடுக்க வேண்டும்

### யாழ்.பல்கலைமாணவர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வை.கோ.வின் விடுதலையை வலியுறுத்தியும் தமிழக அரசின் செயலுக்கு தமதுஎதிர்ப்பைதெரிவித்தும் தமிழ்மக்கள்தாம் சார்ந்துள்ளஅமைப்புகளினூடாக விரைந்து நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகபொதுச்செயலாளர் வை.கோபாலசாமியின் கைதைக்கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; தமிழீழமக்களின் விடுதலைப் போராட்டத்திற்காக குரல் கொடுத்து வந்த வை.கோபாலசாமி தமிழ் நாட்டில பேய் ஆட்சி நடத்தும் செல்வி ஜெயலலிதாவின் அரசினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த தமிழ் இனத்தினராலுமேஇன்று வன்மையாககண்டிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலை போராட்டத்தின் தேசிய சக்தி தமிழீழ விடுதலைப் புலிகளே என்றும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தனி தமிழீழமே தீர்வு என்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட(சர்வதேசத்தின்) அனைத்து பகுதிகளிலும் எம் சார்பாக குரல் கொடுத்து வந்த எமது உடன்பிறப்பான வை.கோ. இன்று எமக்காக சிறையில் வாடுகின்றமை ஈழத்தழர்கள் அனைவரையும் மிகவும் வேதனைக்குட்படுத்தியுள்ளது.

தமிழ் நாட்டில் பேய் ஆட்சி நடத்தும் செல்வி ஜெயலலிதா தனதுஅரசியல்பழிவாங்கல்களுக்காகவும் அரசியல் இலாபங்களுக்காகவும் ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் உயிர் தியாகத்திலும் பல்லாயிரக் கணக்கானபோராளிகளினதும் பொது மக்களினதும் இரத்தினாலும்வளர் தெடுக்கப்பட்ட எமது விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப் படுத்த நினைப்பதையும் விடுதலை போராட்டத்திற்கு ஆதரவானவர்களை பழிவாங்கவோ தடைசெய்யவோ நினைப்பதும் எந்த வொரு தமிழனாலும்தாங்கிக்கொள்ளவோ பொறுத்துக் கொள்ளவோ முடியாதது.

எமக்காக குரல் கொடுத்த குற்றத்திற்காக இன்று சிறையில் வாடும் எமது உடன்பிறப்பான வை.கோ வுக்கு எமது முழுமையான ஆதரவினை வழங்குவதோடு வை: கோ. உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் கோருவதுடன்,வை. கோவின் விடுதலையை வலியுறுத்தி அனைத்து தமிழீழமக்களும் தமது ஆதரவினையும் செல்வி ஜெயலலிதாவின் செயலுக்கு தமது எதிர்ப் பினையும்தாம் சார்ந்துள்ள அமைப்புக்களினூடாக விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் கோருகின்றோம் என்றுள்ளது. (ஷ)

## சட்ட விரோதமாக இத்தாலி செல்லவிருந்த 28 பேர் சீதுவவில் கைது

(கொழும்பு)
சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்கு சீதுவபகுதியில் தங்கியிருந்த 28 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கொழும்பு பகுதிகளிலிருந்து வந்தவர்களே இவ்வாறு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என சீதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்னும் ஒரிரு தினங்களில் இத்தாலிக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு விடுதி ஒன்றில் தரகரால் தங்கவைக்கப்பட்டிருந்த போதே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது இவர்கள் ஒவ் வொருவரிடமிருந்தும் தலா 2 இலட்சம் ரூபா தரகரினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். (உ-8)

# அரேபியக் கடலில் கைவிடப்பட்ட கப்பல்

# இலங்கை - இந்திய நாடுகள் புலனாய்வு

(கொழும்பு)
இந்தியாவின் தென்மேற்கு கரையோரப் பகுதியில் அரேபியக் கடலில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள நடுத்தர சரக்குக் கப்பல் தொடர்பாக இந்திய கரையோர காவற்படையினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதனை இலங்கையின் இராணுவப்புலனாய்வுப்பகுதியினரும் நுணுக்கமாகஅவதானித்து வருகின்றதாகஅறியப்படுகிறது.

இக்கப்பல் ஆயுதக் கடத்தல்எதனிலும் ஈடுபட்டிருக்கிறதா என்பது பற்றியே இரு நாட்டினதும் அதிகாரிகள் புலன் விசாரணை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எம் வீ.முர்தடா என்னும் இந்தக்கப்பல் லிபியக் கம்பனி ஒன்றிற்குரியது எனவும் பொருட்களோ பணியாளர்களோ இக்கப்பலில் காணப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

இந்திய கடலோரப்படையினர் இக்கப்பலை தமது துறைமுகம் ஒன்றிற்குஇழுத்து வரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். (உ)

## சி. ஐ. பி. சி. விசாகாட் கண்டெடுப்பு

நிஷாந்தினி நடராசா என்பவருடைய சி. ஐ. பி. சி. விசாகாட் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## அமெரிக்காவில் செய்தியாளர் மாநாடு

(கொழும்பு)
5 நாட்கள் விஜயம் மேற்கொண்டு விரைவில் அமெரிக்கா செல்லும் பிரதமர் விக்கிரமசிங்கமுன்னர்எதிர்பார்த்தது போல அமெரிக்காவுடன் சுவீகரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்தில் ஒப்பமிடமாட்டார்.

அதற்கு மேலும் சிலகாலம் செல்லும் என்றும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பிரதமர்சமாதானவேலைத்திட்டம் பற்றியும் பொருளாதார ஒத்துழைப்பு பற்றியுமே உரையாடல்களைநடத்துவார் என்றும் அங்கு அவர் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்,ராஜாங்கச் செயலர் கொலின்பவல், பாதுகாப்பு செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களையும் சந்திப்பதுடன்அங்கு செய்தியாளர் மகாநாடொன்றையும் நடத்துவார் என்றும் பிரட்டமன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (உ)

## மன்னார்- கொழும்பு சமாதான சைக்கிள் யாத்திரை 19 இல்

(கொழும்பு)
மன்னாரில் இருந்துகொழும்புக்கு இடம்பெறவிருந்த சமாதான சைக்கிள் யாத்திரை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமாதான சைக்கிள் யாத்திரையானது நேற்று மன்னாரில் ஆரம்பமாகவிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமானவர்கள் இதில் கலந்து கொள்ள ஆர்வம் தெரிவித்திருந்ததன் பேரில், அவர்களுக்கான உணவு தங்குமிட ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டே ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ)

## புனிதயாகப்பர் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)
புனித குருநகர் யாகப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று காலை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து தினமும் நவநாள்வழிபாடுகள் செபமாலையுடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை நற்கருணை வழிபாடு சமாதான எழுச்சி நிகழ்வாக இடம் பெறும்.

திருவிழா தினமாகிய 25 ஆம் திகதி 5.30 மணிக்கு முதலாவது திருப்பலியும், காலை 7.00 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் இடம் பெறவுள்ளது. (ஷ-6)

## யாழ் குறிகட்டுவான் சாலை பேருந்துகளில் நெருக்கடி பயணிகள் சிரமம்

(கல்வயல்)
யாழ்ப்பாணம்-குறிகட்டுவான் சாலையில் தற்போது பெரும் எண்ணிக்கையான பயணிகள் பயணம்செய்வதால் பேருந்துகளில் நெருக்கடி நிலவுகிறது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் நாகவிகாரை ஆகியவற்றுக்கு தென்னிலங்கை யாத்திரிகர் குழுக்கள் தினமும் வருகைதருவதே இச் சிரமத்திற்குக் காரணமாகும்.

தீவுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலர் மீளக் குடியமர்வதோடு குடியிருப்புகள் மற்றும் வர்த்தகநிலையங்களையும் திருத்தம்செய்து வருகின்றனர். இதனால் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்படும் கட்டடப் பொருட்கள் மற்றும் பாவனைப்பொருட்கள் இவ்வீதியினூடாக எடுத்துச் செல்லப்படுவதாலும் பேருந்து சேவைகளில் தாமதம் ஏற்படுகிறது.

இதனால் இடையூறுகளை எதிர்நோக்கும் பயணிகள் மேலதிக பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஷ-111)

## ஒழுங்கு விதியை மீறும் யாத்திரிகர் குழுக்கள்

(கல்வயல்)
நயினை நாசபூசணி அம்மன் ஆலயத்திற்கு தற்போது தென்னிலங்கையிலிருந்து வரும் பக்தர்களினால் ஆலய ஒழுங்கு விதிகள் மீறப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுபடுகிறது.

ஆலய உள்வீதிகளில்,அவர்கள் நவநாகரிகஉடைகளுடன் நடமாடுவதாகவும் கழிவுப் பொருட்களை ஆலய வீதிகளில் வீசுவதாகவும்இதனால் அச் சூழலின் வனப்பு கெடுவதாகவும் அப்பகுதி வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆலயத் தொண்டர்களும் இவ்விடயத்தில் பாராமுகமாக இருப்பது குறித்து அவர்கள் மேலும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஷ-111)

## சாவ. இந்துக் கல்லூரியில் தளபாட வசதியில்லை தரையில் அமரும் மாணவர்

(திருநெல்வேலி)
சாவகச்சேரிஇந்துக் கல்லூரிக்குஇதுவரை அரசாங்கத்தால் எத்தகைய நிதியுதவியும்வழங்கப்படவில்லை என்றுகல்லூரி அதிபர் இ. கயிலைநாதர் கவலை வெளியிட்டுள்ளார்.

பாடசாலையைபுனரமைக்க 15 இலட்சம் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இடம் பெயர்விற்குமுன்னர் ஆயிரத்து 950 மாணவர்கள் கல்வி கற்றார்கள் என்றும் தற்போது ஆயிரத்து 700 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

எட்டு வகுப்பறைகள் தற்போதுகொட்டகைகளில்நடைபெற்று வருவதாகவும் 500 மாணவர்கள் தளபாட வசதியின்றி கல்வி கற்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (உ-43)

## கொழும்பு மத்தியில் 1194 வீடுகளில் டெங்கு நுளம்புப் பெருக்க தோற்றுவாய் கண்டறிவு

(கொழும்பு
கொழும்பு மத்திய பகுதியில் உள்ளஆயிரத்து 194 வீடுகளில் டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கான தோற்றுவாய்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதனையடுத்து, இத்தோற்றுவாய்களை இல்லா தொழிக்குமாறு, கொழும்பு மாநகர சபை 7 நாள கால அவகாசத்தை கடந்த ஞாயிறன்று சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளருக்கு வழங்கியுள்ளது.

தவறுமிடத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும்சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## பிரதமலிகிதர் ஓய்வு பெற்றார்

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றிய அ. ஸ்ரீஜெபபாரதிஅண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

## சங்கே முழங்கு

### குடி நீர் இன்மையால் கலகம் தோன்றும் நிலை

எமது தீவின் நன்னீர்ப் பிரதேசமானமேற்குதாராப்பிட்டி பகுதியிலிருந்து நீர் வசதிகுறைந்த பகுதிகளுக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் குழாய் நீர் விநியோகம் நடைபெற்று வருகின்றமை யாவரும் அறிந்ததே. 34 தொட்டிகளில் இரண்டு மேற்குப் பகுதியிலும் ஏனையவை கிழக்கு, மத்திப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டு தனி நபர்களின் பொறுப்புக்களில் கண்காணிக்கப்பட்டும் வந்தன. குறித்த தொட்டிகளில் நீர் எடுப்பதற்குரிய குடும்பங்களும் வரையறுக்கப்பட்டு குடத்துக்கு 50 சதம் என்ற விகிதத்தில் பணம் அறவிடப்பட்டு வந்தது.

அவ்வேளைகளில் தொட்டிகளில் போதிய நீர் விநியோகித்து மீதமாகவும் இருந்து வந்தது. ஆனால் தற்போது நீருக்கு அறவிடப்பட்ட கட்டணம் நீக்கப்பட்டபின் உடுப்பு துவைத்தல், கால் நடைகள், பூமரங்கள் என்பவற்றுக்கும் பயன்படுத்துகின்றனர். இப்பொறுப்பற்ற தன்மையால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக உத்தியோகத்தர்கள் தங்கள் பணி முடிந்து நீர் எடுக்கச் சென்றால் வெறும் கையோடு திரும்ப வேண்டியுள்ளதுடன், வேறு தொட்டிகளுக்கு சென்றால் இவ்வளவு காலமும் ''தண்ணீர் குடிக்காமலா இருந்தீர்கள்'' ஆடு வளர்ப்பு தொடங்கி விட்டீர்களா, எனப் பல கதைகள், அவப்பெயர்கள் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வாய்த்தர்க்கங்கள் தொடங்கி விபரீதமான நிலைகளைத் தோற்றுவிக்கலாம். எனவே, சம்பந்தப்பட்டோர் நீரை வீணாக்கி நீர்வளத்தைச் சிதைக்காமல் எல்லோரும் பயன்பெற உதவ வேண்டும். அதிகாரிகள் கட்டுப்பாட்டு நடைமுறையை விரைந்து அமுல்படுத்த வேண்டும்.

G.P. நாதன்,
நெடுந்தீவு.

## மகப்பேற்று நிலையம் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)
கோண்டாவில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அரசினர் மருந்தகத்தில் இயங்கி வந்த மத்திய மகப்பேற்று நிலையம் கடந்த மாதம் முதல் பூட்டப்பட்டு இருப்பதனால் அப்பகுதிக் கர்ப்பிணித்தாய்மார்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மகப்பேற்று மருத்துவ நிலையம் கடந்த 18 வருடங்களாக இயங்கி வந்ததாகவும் போதிய கட்டில், இட வசதிகளைக் கொண்டிருந்ததாகவும் இம் மகப்பேற்று நிலையத்தின்மூலம் கோண்டாவில், இணுவில், உரும்பிராய் பகுதி மக்கள் பெரும் பலன் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மகப்பேற்று நிலையத்தில் வைத்திய கலாநிதி சி. என். நச்சினார்க்கினியன் வாரந்தோறும் கர்ப்பிணித் தாய் மார்களுக்குரிய கிளினிக்குகளை நடத்திவந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம் மகப்பேற்று நிலையம் பூட்டப்பட்டமையை அறியாத மக்கள் அங்கு சென்று ஏமாற்றமடைவதுடன் பெரிதும் விசனம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## வடமராட்சி கிழக்கில் மேலும் இரு பாடசாலைகள் மீள இயங்குகின்றன

(திருநெல்வேலி)
தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான வடமராட்சி கிழக்கில் நேற்று இரு பாடசாலைகள் மீளத் திறந்துவைக்கப்பட்டுள்ளன. மாமுனை அ.த.க பாடசாலைதாளையடிறோ க.த.க பாடசாலை ஆகியனவே மீளத் திறந்துவைக்கப்பட்டன.

இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகளின் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பொறுப்பாளர் தீபன் உட்பட கல்வி திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே வடமராட்சி கிழக்கு பகுதியில் 4 பாடசாலைகள் இயங்கி வருவதுடன் தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்து வரும்வேளையில் இப் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-43)

## சிகை ஒப்பனை நிலையங்களுக்கும் ஞாயிறு விடுமுறை

(யாழ்ப்பாணம்)
இனிவரும் காலங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள சிகை ஒப்பனையாளர் சங்கங்கள் புதன்கிழமைகளில் திறக்கப்படவேண்டும் எனவும்,

ஞாயிற்றுக் கிழமையே விடுமுறை தினமாகும் எனவும் கிராமியத்தொழில் செய்பவர்களுக்கும் இது பொருந்தும் எனவும் செயலாளர் அ. அல்பேட் அறிவித்துள்ளார்.

இதேவேளை, காலை 7.30 மணிக்கு சிகைஒப்பனை நிலையங்களை திறந்து இரவு 8.00 மணிக்கு பூட்டப்படல் வேண்டும்.

இவ் விதிமுறைகளை மீறுவோருக்குஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## சங்கீதச் சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டிய ஒருவர் என்னைத் தேடி திடீர் என்று ஒருநாள் வந்தார். என்ன விஷயம்? என்று கேட்டேன். 'நாதஸ்வரம் வாசிப்பதற் குக்கற்றுக் கொள்ளலாமா என்று யோசிச்கிறேன்' என்றார். சங்கீத சீசன் இல்லையா? பலர் வாசிக்கிறதைப் பார்த்திருப்பார் போல இருக்கிறது! நான் மிகவும் பயந்து போய் விட்டேன். ஏனென்றால் அவருடைய சாமர்த்தியம் எவ்வளவென்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவரைப் பக்கத்தில் உட்கார வைத்து மெதுவாகப் புத்திமதி சொல்ல ஆரம்பித்தேன்

'இதோ பாருங்கள்! உங்களுக்கு எதற்கு இந்த விபரீத ஆசை? சங்கீத மென்பது ஒரு சுகமான அனுபவம்! நாங்களெல்லாம் சங்கீதம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டு நாங்களும்கஷ்டப்பட வேண்டாம். சங்கீதத்தையும் கஷ்டப் படுத்தவேண்டாம்' என்றேன்' அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்கிற மாதிரித் தெரியவில்லை. எப்படியும் நாதஸ்வரம் கற்றுக் கொண்டேயாக வேண்டும் என்பது போலப் பேசினார் சரி வேறு வகையில் முயற்சி செய்து பார்கலாம் என்று யோசித்து ஒரு நேயர் எனக்குத் தெரிவித்திருந்த ஒருகதையை அவரிடம் சொன்னேன்.

ஒரு ஊரில் ஒரு கோயில், அந்தக் கோயிலில் ஒரு தல விருட்சம். அந்த மரத்தில் ஒரு பிரம்மராட்க்ஷன். ஒரு காலத்தில் நிறையப் பாவங்கள் செய்து விட்டுச்சாபம் வாங்கி–பிரம்மராட்க்ஷனாக மாறியவன் அவன். சாப விமோசனத்துக்காக அந்தமரத்தில் காத்துக் கொண்டிருக்கிறான். நல்ல புத்தி, ஞானமுள்ள ஆள்தான். ஏதோ போதாத காலம் பாவம் பண்ணி விட்டு இப்படி ஆகி விட்டான்! பிரம்ம ராட்க்ஷனான அவனைக் கண்ணால் பார்க்க முடியாது. அவனுக்கு உருவம் கிடையாது. அந்தக் கோயிலில் உள்ள தல விருட்சத்தில் அவன்இருந்து கொண்டிருக்கிறான். ஒரு பேய் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்தக் கோயிலில் . . . தினமும் நாதஸ்வரம் வாசிக்கிற ஒருவர் வாசிக்கிறார் என்று கூடச் சொல்ல முடியாது. ஊதுவார் அவ்வளவு தான். முறையான பயிற்சி இல்லாதவர்அவர். நமது ஆள்போன்று அவரும் திடீரென்று ஆசைப் பட்டுக்கற்றுக்கொண்டாரோ என்னவோ? அவரின் வாசிப்பைச் சகித்துக்கொள்வது கஷ்டம். அவர் தினமும் காலையிலும், மாலையிலும் கோயிலில் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள் வாங்கிச் சாப்பிடுவார். மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவரின்காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் அந்தக்கோயிலில்வெகுநேரம்அவர்வாசித்து விட்டு இரவு வீட்டுக் குப் புறப்பட்டார் அப்போது அந்த மரத்தில்இருந்த பிரம்ம ராட்க்ஷன் அதாவது பேய் அவரிடம் பரிதாபமாகப்பேச ஆரம்பித்தது.

'இதோ பாரப்பா.. என்னை நீ கண்ணால்பார்க்க முடியாது. இருந்தாலும் உன்னுடைய வாசிப்பை வேறு வழியில்லாமல் தினமும் நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். எனக்கு ஒரு ஒத்தாசை செய்வாயா? என்று கேட்டது. என்னசெய்ய வேண்டும்? என்று கேட்டார் இவர். 'இனிமேல் நீ வாசிக்கிறதை விட்டுவிடவேண்டும்' என்றது. ஏன் அப்படிச்சொல்கிறாய்? என்று இவர் பரிதாபமாகக் கேட்டார்.

நான் ஏற்கனவே ஒருபாவம் செய்துவிட்டு பிரம்மராட்க்ஷனாக மாறி சாபவிமோசனத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தாலும் சங்கீதஞானம் உள்ளவன்தான்... நீ வாசிப்பது கொஞ்சம்கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது. என்னால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை இதேமாதிரி நீ தினமும் வாசித்து அதைநான் கேட்டுக் கொண்டு வந்தால் சாப விமோசனம் கிடைப்பதற்குள் இங்கேயே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன் இப்பொழுதே, தினம் தினம் உன் வாசிப்பைக் கேட்டுக் கேட்டு துரும்பாக இளைத்துப் போய்விட்டேன்' என்றது! பாவம்!

நீ சொல்வதும்சரிதான், ஒத்துக்கொள்கிறேன். நான் வாசிப்பதை என்னாலேகூடச் சகித்துக்கொள்ள முடியவில்லைத்தான். இருந்தாலும் இதைவிட்டால் எனக்குவேறு எந்தத்தொழிலும் தெரியாது. சாப்பாட்டுக்கே நான் இதைத்தானே நம்பிஇருக்கிறேன். இதை விட்டு விட்டு என்ன செய்வது என்றார் அவர். 'உனக்குச் சாப்பாட்டுக்கு ஏதாவது வழி பண்ணினால் வாசிப்பை விட்டுவிடுவாயா?' என்று கேட்டது அது. 'விட்டுவிடுவேன்' என்றார் இவர்.

அப்படியென்றால் நான் சொல்வதைக்கேள். இந்தஊர் இராஜாவின் மகளைப்போய் நான் பிடித்துக்கொள்கிறேன் தன் மகளுக்குப் பேய் பிடித்திருக்கிறதென்று தெரிந்தவுடனே அந்தஇராஜா ஊரில் உள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார். நான் யாருக்கும் அசைந்துகொடுக்காது இருந்து கொள்கிறேன். கொஞ்ச நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்குவா. 'நான் அரசகுமாரிக்குப் பிடித்திருக்கின்ற பைத்தியத்தைச் சரி செய்து விடுகிறேன் என்றுசவால்விடு' பின்னர் நாதஸ்வரத்தைவாசி நான் அந்தப்பெண்ணைவிட்டு விட்டு வந்து விடுகின்றேன். உடனேஇராஜாஉன்னுடைய திறமையைப் பாராட்டி நிறையப் பொன்னும் பொருளும் கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சௌக்கியமாகக் காலம் தள்ளலாம் என்று யோசனை சொல்லியது.

இவரும் யோசித்துப் பார்த்தார். இது மிகவும் நல்லதென்றுதோன்றியதுசரிஎன்று ஒத்துக் கொண்டார். இந்தத் திட்டப்படியே எல்லாம் நடந்தது. இராஜா நிறையப் பரிசுகள் கொடுத்தார். இவரும் நாதஸ்வரம்வாசிப்பதைவிட்டு விட்டார். இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருக்கிற நண்பரிடம் சொன்னேன். அப்படிச் சொல்லியும் அவர் நாதஸ்வரம் கற்க வேண்டும் என்கிற ஆசையைக்கைவிட்டதாகத் தெரியவில்லை.

'சரி! இவரை எப்படி சரி செய்வதென்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விஷயத்தைச் சொன்னேன். அதைக் கேட்ட பின்னர்தான் சரி அப்படியென்றால் நான் நாதஸ்வரம் கற்றுக் கொள்கிற யோசனையைக்கைவிட்டு விடுகின்றேன்' என்று ஒத்துக் கொண்டார். நான் என்ன சொன்னேன் தெரியுமா? 'நீங்கள் நாதஸ்வரம் வாசிக்கக் கற்றுக் கொள்வதென்று முடிவு பண்ணினால், உங்களுடன் வாசிப்பதற்குஉதவியாக நானும் தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன் என்று சொன்னேன். அவ்வளவு தான் ஆள் அமைதி.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# பத்திரிகைச் செய்திக்கு மறுப்பு

(கொழும்பு)

விரைவில்கொழும்பிலிருந்து வெளிவரவிருக்கும் 'நோத் ஈஸ்ரேன் ஹரோல்ட்' என்னும் ஆங்கிலப்பத்திரிகை முன்பு அறிவிக்கப்பட்டது போன்று ஒரு விடுதலைப்புலிகளின் பத்திரிகையல்ல என்று பத்திரிகையின் ஆசிரியராக பொறுப்பேற்கவுள்ள ஜே.எஸ். திசநாயகம் மறுத்துள்ளார்.

சுவீடனின்நிதியுதவிபெற்று நடத்தப்படவுள்ள இப்பத்திரிகை 1992 இல் மாதாந்த அரசியல் சஞ்சிகையாக வெளி வந்திருந்தது.

அதிகாரப் பரவலாக்கம் வாயிலாகநிலைத்த சமாதானம், நல்லாட்சி முறை, ஜனநாயக அமைப்புகளை நிறுவுதல் என்பன தொடர்பான சிந்தனையை வளர்ப்பதே இப்பத்திரிகையின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

(உ)

# உதவிப் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கி துப்பாக்கி அபகரிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா கல்கஸ் சந்திக்கருகே கடமையில் இருந்த பாதுகாப்பு உதவி உத்தியோகத்தரைத்தாக்கிவிட்டு இனம் தெரியாத குழுவொன்று அவரிடமிருந்த துப்பாக்கியை அபகரித்துச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது ரி -56 ரக துப்பாக்கியொன்றும், 30 தோட்டாக்களும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு உதவி உத்தியோகத்தருடன் கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவம் நடந்த போது அவ்விடத்தில் இருக்கவில்லையென்றும், இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் நோட்டன் சில்வா தெரிவித்துள்ளார்.

(உ-8)

# விடுதலைப் புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகள் திருமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்–முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரமுகர்களுக்கும் இடையில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது தமிழ்-முஸ்லிம் மக்களிடையே எதிர்காலத்தில் பிரச்சினைகள் உருவாகாத வகையில் மாதம் ஒருதடவை அல்லது இரண்டு தடவைகள் இவ்வாறான சந்திப்புகளை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பாக திலக் ராஜேஸ் ஆகியோரும் முஸ்லிம்கள்சார்பில் மூதூர் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (க)

# இலவச சீருடைக்கு போலி விண்ணப்பங்கள் அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள இலவச சீருடைக்கு போலி விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டுவருவதாகவும், இதில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

கல்வி அமைச்சு தனது வேண்டுகோளில் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைக்குரிய விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (வ)

# இராசி பலன்

16.7.2002
(ஆனி 32, செவ்வாய்)
சப்தமி பி.இ 2.15 வரை
அத்தம் பி.இ 1.07 வரை
ராகுகாலம்- 3.00 -4.30
நல்லநேரம் 10.30-12.00

**மேடம்**
செய்தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, முயற்சி நிறைவேறும், தேகஆரோக்கியம்.

**இடபம்**
வியாபார நன்மை, உடல் சோர்வு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு.

**மிதுனம்**
மாணவர் கல்வி மேன்மை, வேலைக்கஷ்டம், முயற்சிதாமதம், சிறுவியாதி.

**கடகம்**
குடும்ப மகிழ்ச்சி, வாகன சுகம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை.

**சிங்கம்**
காரிய தாமதம், வேலைக் கஷ்டம், கௌரவக்குறைவு பொருள் விரயம்.

**கன்னி**
பெரியோர் ஆதரவு, காரிய நன்மை, போசன சுகம், எதிர் பாராத நன்மை.

**துலாம்**
கோபப்படுதல், செய்தொழில் மந்தம், காரியதாமதம், சுய செலவு.

**விருச்சிகம்**
காரிய அனுகூலம், கீர்த்தி, நண்பர்கள்உதவி, தனலாபம்.

**தனுசு**
சொத்துக்களால் நன்மை, நல்ல சம்பவம், காரிய அனுகூலம், தொழில் விருத்தி.

**மகரம்**
மனச்சஞ்சலம், முயற்சிதாமதம், பிரியம், இடமாற்றம்.

**கும்பம்**
காரிய தடங்கல், வீண் பிரச்சினை, போசன சுகம், ஸ்திரி வியாதி.

**மீனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர சுகம் தொழில்முன்னேற்றம், காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கழிவு நீர் தேங்குவதால் நுளம்புப் பெருக்கம்

## மக்கள் சிரமம்

(கல்வயல்)

சிவலிங்கப் புளியடிச்சந்தியிலிருந்து ஒட்டுமடம் சந்தி வரையில் உள்ள ஒட்டுமடம் வீதியின் மருங்காகச் செல்லும் வாய்க்காலில் கழிவு நீர் நீண்டகாலமாகத் தேங்கி நிற்பதால் அப்பகுதியிலிருந்துதுர் நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளது.

ஒட்டுமடம் சந்திக்கு அப்பால் அராலி வீதியிலுள்ள குளத்தடி, பொம்மைவெளி, நாவாந்துறைப் பகுதிவடிகால்கள் தூர்ந்து போய் துப்புரவு செய்யப்படாமையே இதற்கான காரணமாகும்.

இவ்வாய்க்கால் துப்புரவு செய்யப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் மிகுந்த விசனம் தெரிவித்துள்ளனர். (ஷ-111)

# போதைப் பொருள் ஒழிப்பு விசேட பிரிவு அமைப்பு

## ஜனாதிபதி தகவல்

(கொழும்பு)

போதைப் பொருள் பழக்கத்தை ஒழித்துக் கட்டுவதனை விஸ்தரிக்கும் நோக்கில் விசேட பிரிவொன்றை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

இலங்கை போதைப் பொருள் பழக்கமற்றோர் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதேஇதனை தெரிவித்துள்ளார்.

இப் பிரிவு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தீய செயலை இலங்கைச் சமூகத்தில் இருந்து ஒழித்துக் கட்டுவதற்காகவே இப் பிரிவு உருவாக்கப்பட்டது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (உ-8)

அல்லைப்பிட்டி உத்தரிய அன்னையின் திருவிழாவை யொட்டிய கவிதை

### தாவீதின் கோத்திரம்

அத்தியந்த பத்தியுள்ள
அதிசய பாத்திரமே
தத்துவங்கள் நிறைவுள்ள
தாவீதின் கோத்திரமே
சத்திய வேதத்தின்
சான்று திடகாத்திரமே
உத்தரியத் தாயுனக்கு
உயர்வான தோத்திரமே!

- அல்லையூர் ஏகலைவன்

### அமெரிக்க பத்திரிகையாளர் கொலை

# இஸ்லாமியத் தீவிரவாதி ஒமருக்கு மரண தண்டனை

(இஸ்லாமாபாத்)

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல்பேளைகொலை செய்தகுற்றத்திற்காகபிரிட்டனில் பிறந்த இஸ்லாமியதீவிரவாதி அகமத் ஒமர் ஷகீப் ஷேக்கிற்கு பாகிஸ்தானின் நீதிபதி அஷ்ரப்அலிஷா நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

இவருடன்குற்றவாளிகளாக இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட ஏனைய மூவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது

முஸ்லிம் தீவிரவாதிகள் குறித்து ஆய்வு நடத்திய அமெரிக்க பத்திரிகையாளர் டானியல்பேள் கடந்தஜனவரி மாதம் 23 ஆம் திகதி பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார்.

இவரது சடலம் கராச்சி புறநகர்ப்பகுதியில் கடந்த மே மாதம் கண்டுபிடிக்கப்பட்டபோது அது பேளின் சடலம் தானா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனாலும் அவர் கொல்லப்பட்டு விட்டார்என்பதை உறுதிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா வெளியிடப்பட்டது தெரிந்ததே. (உ-8)

### நகர்ப்புற பாடசாலைகளில் நாட்டம்

# 500 இற்கும் அதிகமான கிராமிய பாடசாலைகளுக்கு மூடுவிழா

(கொழும்பு)

நாட்டின் பலபாகங்களிலும் உள்ள பிரபலமான பாடசாலைகளையே பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதற்காக பெற்றோர் நாடிச் செல்வதனால்கிராமப்புற பாடசாலைகள் மூடப்படவேண்டிய சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளதாககல்வி அமைச்சுவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக சுமார் 500 க்கும் அதிகமான பாடசாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போதும் மாகாணசபைகள் சிறிய பாடசாலைகளை மூடிவிடும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன. இதனால் கிராமப்புறங்களை சேர்ந்த மாணவர்கள் பெரும் சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர். இதனை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு பிரபல நகர பாடசாலைகளில் அளவுக்கு அதிகமான மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் குறைப்பு செய்யப்படவுள்ளது. (உ-8)

# கற்றல் செயற்பாடுகளுக்கு படையினர் இடையூறு

### கண்காணிப்பு குழுவுக்கு மகஜர்

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் எமது பாடசாலை இதுவரை காலமும் வேலணை கடற்படையின் முன்னணிப்பாதுகாப்பு நிலைகளுக்குள்ளேயே அமைந்திருந்தது.

இரு நாட்களுக்கு முன்புவரை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் வங்களாவடி- புளியங்கூடல் சந்தியூடான- ஊர்காவற்றுறை பிரதான வீதியூடாகப்பிரயாணம் செய்ய கடற்படையினரின் எந்த தலையீடும் இன்றி அனுமதிக்கப்பட்டது.

ஆனால், தற்போது இவ்வீதி பாவனைக்குத்தடை விதிக்கப்பட்டு பாதுகாப்பற்ற இன்னொரு பாதையூடாக பயணிக்குமாறு கடற்படையினர் தெரிவிக்கின்றனர். இதனால் பாடசாலைமாணவர்கள், ஆசிரியர்கள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள்.

பிரதான வீதி மூடப்பட்டுள்ளதுடன், சிற்பனை மயிலப்புலம் வீதியும் முடப்பட்டுள்ளது.

இத்திடீர் மாற்றத்தினால் நீண்டதூரம் மாணவர்கள் பயணிக்க வேண்டியுள்ளதால் மாணவர்களின் பாடசாலை வரவு வீழ்ச்சியடைந்துள்ளது.

எமது பாடசாலையின் மாணவர் விடுதியும் கடற்படையின் பாவனையிலேயே உள்ளது.

இதனால் எமது மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலையில் இடம் பெறும் கூட்டங்களில் பங்கு பற்ற முடியாமையினால் பாடசாலையின் ஏனைய செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றது.

மேற்படிபிரச் சினைகளுக்கு தாங்கள் விரைவாக தீர்வு காண நடவடிக்கை எடுத்து பாடசாலை மாணவர்களின் கல்வியைச் சீரடையச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது (உ-75)

# ஈராக்கிய அதிகாரிகள் லண்டனில்மன்றம்அமைப்பு

(லண்டன்)

வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வரும் சிரேஷ்ட ஈராக்கிய இராணுவ அதிகாரிகள் லண்டனில் நேற்று மன்றம் ஒன்றை அமைத்துள்ளனர்.

ஈராக்கின்ஜனாதிபதிசதாம் ஹுஸைனை பதவி கவிழ்த்துவிட்டு அங்கு சிவிலியன் ஆட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இம் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் முன்னாள் கடற்படை அதிகாரி மேஜர் ஜெனரல் தௌபிக் சல்யசீர் இம் மன்றத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கின் பல்வேறு சமுதாயத்தின் அங்கத்தவர்களும் 15 பேரைக் கொண்ட இம் மன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். (உ-8)

### ஆப்கானில்

# கொலறா நோய் தாக்கம் 6 ஆயிரம் பேர் பாதிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில்கொலறா நோயின் தாக்கம் சட்டுப்படுத்த முடியாதவாறு பெருகி வருகிறது.

சுமார் 6 ஆயிரம் பேர் மேற்படி நோய்த் தாக்கம் காரணமாக மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மூவர் உயிரிழந்துள்ளனர்.

கொலறா நோயின் தாக்கத்தினை அங்கு கட்டுப்படுத்தும் வகையில் உலக சுகாதாரத்துறையினர் அங்குசுகாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

# முதலைக் கடத்தல் முறியடிக்கப்பட்டது

(இலண்டன்)

நைஜீரியாவிலிருந்து தென்கொரியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட அபூர்வமான 10முதலைகளை இலண்டன் ஹீத்ரி விமானபடை சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

ஆபிரிக்காவில் காணப்படும் இம்முதலை இனங்கள், தற்போது அழிந்து வரும் இனங்களில் ஒன்றாக காணப்படுகிறது.

இம் முதலைகளை தென்கொரியாவில்பலஇலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் முகவர் ஒருவர் ஊடாக கடத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைஇலண்டன்பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (உ-8)

# மாநில அரசுக்கு கட்சிகளை தடை செய்யும் அதிகாரம் இல்லை

(சென்னை)

எந்தவொரு அரசியல் கட்சியையும் தடை செய்வதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் இல்லை என்று இந்தியாவின் மத்திய சட்டத் துறை அமைச்சர் ஜனா கிருஸ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார்.

எனினும், தடை செய்வதற்கு பரிசீலிக்கும் படிமத்திய அரசை கேட்டுக் கொள்ள உரிமை உண்டு என்றும், ம.தி.மு.க வைத்தடை செய்யும் யோசனை மத்திய அரசிற்கு வரவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார், (ஷ-5)

# பெருந் தாக்குதலுக்கு தயாராகும் ஒஸாமா

(பேர்ளின்)

ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருப்பதாக ஜேர்மன் அரச உளவுத்துறைத் தலைவர் ஒஃஸ்ரனி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் இவர் மறைந்து வாழ்ந்து வருவதாகவும், சுமார் 5 ஆயிரம், அல்கெய்டாக்கள் இரு நாடுகளிலும் தங்கியிருப்பதாகவும் தான் நம்புவதாக தெரிவித்த அவர்,

மீண்டும் ஒரு பெரும் தாக்குதலுக்கு இவர்கள் திட்டமிட்டு வருவதாகவும் எச்சரித்துள்ளார். (உ)

# ஒன்றுகூடல்

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு விழாச் சபையினரால் நடாத்தப்படவுள்ள ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக விழாச்சபையின் செயலாளர் எஸ். கே. தங்கவடிவேல் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கல்லூரியில் கடமையாற்றி இளைப்பாறிய மற்றும் இடமாற்றம் பெற்ற மற்றும் தற்போது பணியாற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் பணியாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

### யாழ். மாநகரசபை

# தீயணைப்பு படையினருக்கு கொழும்பில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படையினருக்கு மேலதிக பயிற்சியளிக்க கொழும்பு மாநகரசபை முன் வந்துள்ளது.

இந்த வகையில்பயிற்சியைப் பெறுவதற்காகஇருவர் தெரிவு செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

6 மாதங்கள் இடம் பெறவுள்ள இப்பயிற்சியை வெளிநாட்டு அதிகாரிகளும் கொழும்புமாநகரசபை தீயணைப்புபிரிவுஅதிகாரிகளும் இணைந்து வழங்கவுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-6)

### மாணவர் நலன்கருதி

# மருத்துவ முகாம் இடமாற்றம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள வதிராயன் பகுதியில் இனிமேல் மருத்துவ முகாம் நடத்தப்பட இருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்று வந்த இம்முகாம் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் பொருட்டு வத்திராயன் பகுதியிலுள்ள கட்டடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் இம்முகாம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது (ஷ-23)

# மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நகரமுதல்வர் செ.கந்தையன் தலைமையில் நல்லூரில் அமைந்துள்ளஇந்து விடுதியில்இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் மாநகர சபையின் எதிர்கால செயற்பாடுகள்தொடர்பாகஆராயப்படவுள்ளது. (உ.6)

# இன்று பூங்காவனம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (ஷ-2)

# முகாமுக்கு அண்மையில் சிசு மீட்பு

(மந்திகை)

பருத்தித்துறை லூர்து மாதா கோவில்பகுதி முகாமுக்கு அண்மையில் பெண்சிசு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் காலை 9.00 மணியளவில் அப்பாதையூடாகச் சென்றவேளை குழந்தை அழும்சத்தம் கேட்ட ஒருவர் அவ்விடத்திற்கு சென்று தென்னோலை ஒன்றினால் மூடப்பட்டிருந்தமேற்படி சிசுவை கண்டுள்ளார்

இதுதொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து பொலிஸாரினால் சிசு மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சிசு நீதிமன்றின் பணிப்பின்பேரில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளது.

சிசு தொடர்பாக தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் பொலிஸாரிடமோ அல்லது பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையுடனோ தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

# புதிய சந்தை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக யாழ் மாநகர சபையானது ஒரு லட்சம் ரூபா செலவில் புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் சந்தை ஒன்றை அமைத்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். நகர முதல்வர் செ. கந்தையனால் இச்சந்தை வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-6)

# இரவுத்திருடர் அட்டகாசம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் இரவுத் திருடரின் அடாவடித்தனங்கள் மீண்டும் அதிகரித்து வருவது குறித்து அப் பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

கிராம சேவையாளர்களின் அனுசரணையுடன் இப் பகுதியில் இயங்கி வந்த விழிப்புக் குழுக்கள் செயலிழந்திருப்பதே திருட்டுச் சம்பவங்கள் மீண்டும் தலை தூக்கக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (உ-79)

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்எனல்.
குறள்

# வலம்புரி

## விலைக் குறைப்பு

ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சி ஏற்ற ஏழு மாத காலத்திற்குள் எரிபொருட்களின் விலை பல தடவைகள் ஏற்றப் பட்டன. எனினும் நேற்று முதல் எரிபொருட்களின் விலைக் குறைப்பை அரசு அறிவித்துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பேரினப் பொருளாதார உறுதியை அதாவது பொது விலை மட்டத்தை உறுதியாகப் பேணுகின்ற பொறுப்பு ஓர் அரசாங்கத்திற் குண்டு.

மாறாக எடுத்ததெற்கெல்லாம் விலை அதிகரிப்பை ஓர் அரசாங்கம் மேற்கொள்ளுமாயின் அது சிறந்த பொருளாதாரக் கொள்கையாக அமையமாட்டாது.

இலங்கையில் 1978 களிற்குப் பின் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய பின்னர் நாட்டின் உள்ளூர் உற்பத்திகள் வெளிநாட்டின் இறக்குமதிப் பொருட்களுக்கு ஈடு கொடுக்க முடியாது சந்தையில் இருந்து வெளியேறின. இதனால் உள்ளூர் உற்பத்தியில் ஓர் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இத்தகைய வீழ்ச்சியும் விலையேற்றத்திற்குப் பங்களிப்பாற்றின என்பதோடு யுத்த செலவுகள் மக்களின் வாழ்க்கை செலவை பல மடங்கு உயர்த்தி வைத்தது.

இதன்னால் ஜீவனோபாயத்திற்குக் கூட மக்கள் பெரும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் மீண்டும் மீண்டும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அரசு அதிகரித்துச் செல்லுமாயின் அதனால் ஏழை மக்களே கடுமையாகப் பாதிக்கப் படுவதுடன் ஏழைக்குடும்பங்களில் போசாக்குக் குறைபாடு அதிகரித்து எதிர்காலத்தில் தங்கி வாழும் சமூகமே உருவாகும்.

இந் நிலையில் அரசாங்கம் எரிபொருட்களின் விலையைக் குறைத்தது ஓரளவேனும் ஆறுதலைத் தருவதாக இருப்பினும் ஏனைய உணவுப்பொருட்களின் விலைக் குறைப்பிலும் அரசு கூடிய கவனம் எடுப்பது அவசர தேவையாகவுள்ளது.

அதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மூன்று ரூபா பாண் போலல்லாது விலைக்குறைப்புக்களைத் தொடர்ந்து நிலையாக வைத்திருப்பதிலும் அரசு கவனமெடுக்க வேண்டும்.

# நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனைக்குமுன்

# மருத்துவ ஆலோசனை பெறப்படுவது அவசியம்

## மருத்துவ விளக்கம்

இப்பொழுது படித்தவர் முதல் பாமரர் வரை மருந்துகளையும், குளிசைகளையும் தம் இஷ்டப்படி பாவிக்கிறார்கள்.

- மருந்துச் சிட்டையின்றி (Prescription chit) மருந்தகங்களில்குளிசைகளைப் பெறக் கூடியதாக இருத்தல்.
- மருந்தகங்களில் ஒரு குளிசை இல்லாவிடில் அதற்குப்பதில் வேறொரு குளிசையை (வைத்திய ஆலோசனையின்றி) கொடுத்தல்.
- வைத்திய சாலைகளில் மக்கள் இடநெருக்கடி, நேரவிரயம்,
- படிப்பறிவின்மை அல்லது அதிமேதாவித் தனம்,
- சமுதாயத்தில்பிழையான முன்னுதாரணங்கள் இதற்கான காரணங்களாகும்.

மேலே குறிப்பிட்டகாரணங்களுள் முதல் இரண்டும் மிக முக்கியமானவை. மருந்தகங்களில் தகுதி பெறாதோர் வேலை செய்வதால், மருந்துகள் மாற்றிக் கொடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகம், மேலும் மருந்தகத்தில்வேலை செய்வோர், டாக்டர் எழுதிய மருந்திற்குப் பதில் விலை கூடிய வேறுமருந்தினை(வியாபார நோக்கத்திற்காக) கொடுப்பதனால் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. மேலும் இப்பொழுது எமது அறிகுறிகளைக் கூறினால் மருந்தகங்களில் மருந்து தருகிறார்கள். நாமும் அதன்பின் விளைவுகளைப் பாராமல் மருந்துகளைப் பாவிக்கின்றோம்.

### வைத்திய ஆலோசனை பெறவேண்டும்

மேலும், படித்த சமூகத்தினிடையேகாணப்படும் பழக்கமானது, வீட்டில் ஒருவருக்கு குறிப்பிட்ட குணங்குறிகள் காணப்படும்போது, வைத்தியரால் கொடுக்கப்பட்ட அதே மருந்தைமீண்டும்வேறொருவருக்கு அதே குணங்குறிகள்ஏற்படும்போது கொடுத்தல், வெவ்வேறு விதமான நோய்கள் ஒரே குணங்குறிகளை வெளிக் காட்டும், என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

பெற்றோர் தம்பிள்ளைகளுக்கு வைத்திய ஆலோசனை இல்லாமல், அடிக்கடி மருந்தினை தம் விருப்பப்படி கொடுக்கிறார்கள். இது மட்டுமல்லாமல், வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியரல்லாதோர், தாங்கள் வைத்திய சாலைகளில் பெற்ற சிற்றறிவினைப் பயன்படுத்தி மக்களுக்கு வைத்தியம் செய்தலும், ஒரு பிழையான வழி காட்டலாகும். மக்களைச் சரியாக வழிநடத்த வேண்டிய இவர்கள், பணத்திற்காக மக்களைப் பிழையான பாதையில் இட்டுச் செல்கிறார்கள்.

ஒருமுக்கியமான விடயம் நுண்ணுயிர்க் கொல்லிமருந்துகளை உரிய காலஇடைவெளியில், உரிய நாட்களுக்கு எடுக்காது விடல், நுண்ணுயிர்க் கொல்லியானது அதன வகையினைப்பொறுத்து நாளொன்றுக்கு 2 தடவையோ, 3 தடவையோ, 4 தடவையோ அல்லது 5 தடவையோ எடுக்கப் படும், மேலும், நோயின் தன்மை நோய்க்கிருமிவகை அதன் தாக்கம் என்பவற்றினைப் பொறுத்து அவற்றினை ஒருநாளோ -3 நாட்களோ -5 நாட்களோ எடுக்க வேண்டும். ஆனால் பெரும்பாலானோர் மருந்துகளை உரிய முறையில் எடுப்பதில்லை. அத்துடன், தங்களுச்கு வசதியான நேரத்தில் மருந்தினை எடுப்பதோடு அவற்றினைப் பூரணமாக எடுத்துமுடிப்பதில்லை.

### பின்விளைவுகள்

துஷ்பிரயோகத்தின் மற்றொருவகையானது நுண்ணுயிர்க் கொல்லிகளை கால்நடைவைத்தியர்களின் ஆலோசனையின்றி வீட்டுப்பிராணிகளுக்குக் கொடுத்தல், மேற்கூறிய வகையில் நுண்ணுயிர்க் கொல்லிகள் துஷ்பிரயோகம் செய்யப் படுவதனால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி ஆராய்வோம்.

மனிதன் இயற்கையோடு வாழப்பிறந்தவன். எனினும், தனது நடவடிக்கைகளினால் இயற்கையிலிருந்து முரண்படும்போது, பல பிரச்சினைகளை எதிர் நோக்குகிறான். விஞ்ஞானமும், மருத்துவமும் ஒருஎல்லை வரையுமே மனிதனுக்கு உதவும். அதுவும் குறிப்பாக இயற்கைவட்டத்திலிருந்து விலகிவரும் மனிதனை, அவ்வட்டத்திற்குள் சேர்ப்பதன் மூலம், அவன் இயற்கையோடுஒன்றிணைந்து வாழ்வதற்கே இவை வழி செய்கின்றன. எம்மில்பலர் இந்தக் கருத்தினை விளங்கி கொள்ளாததாலேயே பல பிரச்சினைகளைஎதிர்நோக்குகின்றனர்.

நாம்பயன்படுத்தும்பனடோல்முதல்பாம்புநஞ்சுஎதிர் மருந்து வரை எமது உடலினைப் பொறுத்தமட்டில் பிற பொருட்களே, தேவை கருதி நாம் தேவையானஅளவுகளில் வைத்தியரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கப்பயன்படுத்தும் போது உச்சப்பயனை அடைவதுமட்டுமன்றி, அதனால் ஏற்படும் பக்கவிளைவுகளைக் குறைத்துக்கொள்ளலாம். எந்த ஒருமருந்தும் சாதாரண அளவுகளில் சில பக்கவிளைவுகளையும், அதிக அளவில்எடுக்கும் போதுபாரதூரமான விளைவுகளையும் (Toxic effects) ஏற்படுத்தும். சாதாரண நோய் நொடிகளாலும், நுண்ணுயிர்களாலும் மனிதன் இறந்து கொண்டிருந்த போது, சேர் அலெக்சாண்டர் பிளமிங் என்பவரால் (1929 ல்) கண்டறியப் பட்ட பென்சிலின் மருந்தானது பல உயிர்களைக் காப்பாற்றியது. அன்று முதல் இன்று வரை பல வகையான நுண்ணுயிர்க் கொல்லிகள் கண்டறியப்பட்டன. ஆனால், எமது நடவடிக்கைகளால் இன்று நாம் எதிர் நோக்கும முக்கிய சவாலானது நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு தடைசக்தியுள்ள நுண்ணங்கிகளின் உருவாக்கமும், அதன் பெருக்கமும் ஆகும். இதற்கான முக்கிய காரணங்கள.

- பிழையான நுண்ணுயிர்க் கொல்லிப்பாவனை.
- குறைவான அளவில் பாவித்தல்.
- முழுக் குளிசைகளையும் எடுத்து முடிக்காமை.
- தேவையற்ற சிறிய வருத்தங்களுக்கும்பாவித்தல்.
- கால் நடைகளுக்கு கண்டபடி பாவித்தல்.

### மருந்துக்கு எதிர்த் தடை வளரும்

பிழையான அல்லது குறைவான அளவில் நுண்ணுயிர்க் கொல்லியினை பயன படுத்தும் போது, அக்கிருமியானது மருந்துக்கு எதிரானதடையை வளர்த்துக்கொள்கிறது (பெற்றுக்கொள்கிறது) அல்லது அம் மருந்தால் கொல்லப்படக் கூடிய நுண்ணங்கிகள் மட்டும் இறந்து போக தடைச் சக்தியுள்ள நுண்ணங்கிகள் பல்கிப் பெருகுகின்றன. இதனாலேயே, சில வேளைகளில் வைத்தியர் ஒன்றுக்கு மேற்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளை சில நோய்களுக்கு (உதாரணம் T.B) தருகின்றார். நுண்ணுயிர்கள் மிக விரைவாகப் பல்கிப் பெருகுகின்றன. அத்துடன் கொல்லிகளின் அகத்துறிஞ்சப்படும் பண்பு, சுற்றோட்டத்தில் காணப்படும்அளவுகள், உடலிலிருந்து வெளியேற்றப்படும் வேகம் என்பவற்றைப் பொறுத்து அவை எடுக்கப்பட வேண்டிய கால அளவுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

### முழுக் குளிசையும் எடுக்க வேண்டும்

எனவே, நுண்ணுயிர்க் கொல்லிகளை உரிய நேரத்துக்கு எடுக்காவிடின் நுண்ணுயிர்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். நுண்ணுயிர்க் கொல்லிகள் பாவிக்கப் படும் போது, நோய்க் குணம் குறிகள்மறைந்தாலும் முழுக் குளிசைகளையும் எடுத்து முடிக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிடின் நோய் மீண்டும் உருவாவதுடன் பாவிக்கப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு தடை உள்ளதாக நுண்ணங்கிகளும் தோன்றும். மேலும், வைத்திய ஆலோசனை இன்றி நுண்ணுயிர்க் கொல்லியை பயன்படுத்தும் போது இரு முக்கிய பிரச்சினைகள் ஆவன,

- உடலில் ஏற்படும்எதிர்ப்பு விளைவுகள் முக்கியமாகபென்சிலின் போன்ற நுண்ணுயிர்க் கொல்லிகள் பரிசோதிக்கப் பட்ட பின்னரே பயன்படுத்தப்பட வேண்டும்.
- வேறு நோய்கள் காணப் படும்போது, சில நுண்ணுயிர்க் கொல்லிகள் தவிர்க்கப் படவோ அல்லது அளவு குறைக்கப்படவே வேண்டும். உதாரணமாக ஈரல் பாதிப்பு, சிறு நீரகப்பாதிப்பு உள்ள நிலைமைகளில் பல குளிசைகளைக் கவனத்துடன் பாவிக்கவேண்டும்.

நுண்ணங்கிகள் ஒரு மருந்துககு என்று இல்லாமல் பல மருந்துகளுக்கு எதிரான தடைசத்திகளை (Multidrug Resistance) கொண்டிருக்கின்றன. இவை பல்கிப் பெருகி நோயினை ஏற்படுத்தும் போது அங்கு நுண்ணுயிர்க் கொல்லிகள் செயல் இழந்து போய் விடும். (Antibiotic Failure) எனவே, நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனை மருத்துவரின்ஆலோசனையின் பின்னரே நடைபெறவேண்டும்.

ரி. கோபிசங்கர்
மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

## தினசரி தியானம்

### உயிர்

வேங்கடநாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத்துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறியாதவர்
தாங்கவல்லாருயிர் தாமறியாரே.

- திருமந்திரம்

என் ஆருயிரே, உன்னைப் பேணுதல் ஒன்றேநான் பெறும் பேறு ஆகும்.

விலையுயர்ந்த ஆபரணம் ஒன்று வைத்திருக்கும் அட்டைப் பெட்டிக்குப் பெரிய பாதுகாப்பு உண்டு. ஆபரணத்தை எடுத்தான பிறகு அட்டைப்பெட்டியைக் குப்பையில் போட்டு விடலாம். நம் உடல் அட்டைப் பெட்டி போன்றது. உயிரோ ஆபரணம் போன்றதுஉயிரின் பொருட்டு உடலுக்கு மதிப்புண்டு.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தி வரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்றுபி.ப4.30 மணிக்கு பற்றிசியன் வி.க. எதிர் கே.சி. சி.சி வி.கவும்,

பி·ப 5.15 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஒல்ட்கோல்ட் வி.கவும் பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளன.

(உ-3)



சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற பேரணியின் போது மகஜர் கையளிப்பதையும், பேரணியில் ஈடுபட்ட ஒரு பகுதியினரையும், பேரணியையொட்டி பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.
படம்:- திருநீபன்

# களுத்துறைக் கைதிகள் நாளை முதல் உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் நாளை முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

எம்மை விசாரணை செய்து விடுதலை செய்ய வேண்டும் என்று கடந்த காலங்களில் நாம் உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டோம்.

அப்போது அதனைக் கைவிடுமாறும் விடுதலையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் இல்லையேல் தாமும் உண்ணாவிரதத்தில் இணைந்து கொள்வதாகவும் தமக்கு மூன்று மாதங்கள் கால அவகாசம் வழங்குமாறும் அரசியல் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவர்களின் மூன்று மாதகால அவகாசம் நாளை 17ம் திகதியுடன் முடிவடைகிறது.

இக் காலத்தில் எமது விடுதலை குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததை அடுத்தே தாம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்ததாகக் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தமது உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக உறுதிமொழி வழங்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களை இணைந்து கொள்ளுமாறும் கைதிகள பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர். (இ)

# யாழ். கல்வி வலயத்தின் தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் வலய தமிழ்த்தினப் போட்டிகள் நாளை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நாளை மறுதினம் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வுகளில் நாளை வாசிப்பு ஆக்கத்திறன், இசையும் அசைவும், தனி இசை, குழு நாட்டுக் கூத்து, மற்றும் இசைநாடகப் போட்டிகளும்,

நாளை மறுதினம் நடனம், தனி குழு நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம் மற்றும் தமிழறிவு வினாவிடைப் போட்டிகளும் நடைபெறுமென்று யாழ் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

# லெப். சீலனின் 19வது ஆண்டு நினைவுதினம் வன்னியில் அனுஷ்டிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி லெப்டினன் சீலனின் 19ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் வன்னிப்பெருநிலப்பரப்பிலுள்ள சாள்ஸ் அன்ரனியின் சிறப்புப்படையினரின் தளம் ஒன்றில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் குருகுல மாணவர்கள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையினர் அணிவகுத்து நிற்க விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் பால்ராஜ் மற்றும் தளபதிகள் நிகழ்வரங்கிற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வரங்கில் முதன்மைச் சுடரினை லெப்டினன் கேணல் ஜெரி ஏற்றிவைத்தார், தமிழீழ தேசியக் கொடியை தளபதி கேணல் பால்ராஜ் ஏற்றிவைத்தார்.

மாவீரர் லெப்டினன் சீலனின் உருவப்படத்திற்கு கண்ணி வெடிப் பிரிவுத் தளபதி உமையாள் மாலை அணிவித்தார். அரங்க நிகழ்வுகள் சாள்ஸ அன்ரனிபடையணிப் பொறுப்பாளர்களில் ஒருவரான அமிதாப் தலைமையில் இடம்பெற்றது.

சிறப்புரைகளை கேணல் பால்ராஜ், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் காண்டீபன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ம)

# வருமானம் குறைந்த மாணவர்க்கே இலவச சீருடை வழங்கப்படும்

## சுற்று நிருபம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம் செய்வதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு நாட்டில் உள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் கல்வி அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பாடசாலை மாணவர்களுக்கே இலவச சீருடைகளை வழங்க அரசு முடிவு செய்திருப்பதை அடுத்து இலவச சீருடை விநியோகம் பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(ம)


## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

யாழ் அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி

காலம்:- 28-07-2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

இடம்:- கல்லூரி மண்டபம்

இவ் அறிவித்தலை அங்கத்தவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்.

செயலாளர்

(C 4665)


### சாவகச்சேரியில்...

அடைந்ததும் அங்கு கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா, மக்கள் நலன் சேவைகள் சங்கத்தின் தலைவர் க.கந்தசாமி சாவகச்சேரி மகளிர் சங்கத்தின் உறுப்பினர் செல்வி வே.தங்கரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் செ.முருகையாவிடம் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி மகஜர் ஒன்றைக் கையளித்தார். இதன் போது மறவன்புலவு மக்களும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

கண்டன உரைகள் இடம்பெற்ற போது திரண்டிருந்த மக்கள் வீதி வழிமறிப்புப் போராட்டத்தையும் நடத்தினர் இதனால் வீதிப் போக்குவரத்து சில மணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்தது.

இக் கண்டனப் பேரணியை அடுத்து சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (உ-வ.43,41)

### வன்னிக்கு...

சந்திரனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை விடுதலைப்புலிகள் இரண்டாவது தடவையாக சந்திக்க இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

### நோர்வேயின்...

சு.ப தமிழ்ச்செல்வன் மீன்பிடிப்பதற்குச் சென்ற ட்ரோலர்-படகுகளை கடற்படையினர் சுட்டுத் தாக்கியதாகவும் இதன் மூலம் அரச படையினரே யுத்த உடன்பாட்டை மீறி இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் ஒரு முயற்சியாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை விரைவில் சந்தித்து பேசவுள்ளார்.

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசுவார் என்பதை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவரும் உறுதி செய்துள்ளார்.(ம)

### சுயாதீன...

ஆரம்பமாகும் விசாரணைகள் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2மணி வரை 19ம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்த விசாரணைகளில் சாட்சியமளிக்க விரும்புபவர்கள் யாழ் செயலகத்துக்கு சமூகமளித்து சாட்சியமளிக்க முடியும்.

அதேவேளை தாக்குதல் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஆணைக் குழுவினர் நேரில் சென்றும் விபரங்களை சேகரிக்கவுள்ளனர். (த-43)

### யாழ் பல்கலை...

வர்கள் எனக்கருதப்படும் 29 மாணவர்களின் பெயர் விபரங்கள் விசாரணைக்காக யாழ் நீதிமன்றிற்கு யாழ் பல்கலைக் கழகத்தால் அனுப்பிவைக்கப்பட்டது.

இவர்களில் 3பேர் மாத்திரமே விசாரணைக்கு சமூகமளித்திருந்தனர். ஏனையோர் விசாரணைக்காக இறுதி தினமான நேற்றுவரை சமூமளிக்காததால் அவர்களை கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(இ-6)


## இடம்மாற்றம்

அனைத்து கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறிண்டிங் வேலைகளுக்கும

கங்கை ஓவ்(f)செற் பிறிண்டேர்ஸ

184A, நாவலர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# அரசியல் துறையின் முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ச.ச நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருடனுமான அதி முக்கிய சந்திப்பு நாளை புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். சம்மந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.(ந)

# வவு.வளாக மாணவர்கள் நேற்று முதல் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் 90 பேர் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமது ஐந்து அம்ச கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை இந்தப் பகிஷ்கரிப்பு தொடரும் என்றும் மாணவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மாணவர்களது நேற்றைய பகிஷ்கரிப்பினால் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி மோகனதாஸின் அலுவலக செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. (வ)

# செங்கலடி-பதுளை வீதி நேற்று திறந்து வைப்பு

## புலி – படை அதிகாரிகள் பங்கேற்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள ஏ-5 செங்கலடி பதுளை வீதி நேற்று நண்பகல் பொதுமக்களின் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்பட்டது.

இப் பாதை திறப்பு நிகழ்வில் விடுதலைப்புலிகளின் சார்பாக சிறப்பு அரசியற் துறைப் பொறுப்பாளர் கரிகாலன், மட்டு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் விசு ஆகியோரும் அரச தரப்பில் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா கிழக்குப் பிராந்திய கட்டளை தளபதி சுனில் தென்னக்கோன், 233 ஆவது படையணி தளபதி கேணல் பி.எல்.ஆர். அன்ரனீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான செங்கலடி வீதியை புலிகளின் மட்டு - அம்பாறை இராணுவத் தளபதி றொபேட் திறந்து வைத்தார்.

வீதி திறக்கப்பட்டதை அடுத்து உடனடியாக பதுளைக்கும் கண்டிக்கும் இடையிலான [illegible] பஸ் சேவைகள் இடம்பெற்றன. (த)


# பெயர் மாற்றம்

கரவெட்டி மேற்கு கரவெட்டி எனும் முகவரியில் வசிக்கும் கணபதி - சோமசுந்தரம், சோமசுந்தரம்-சுசீலாதேவி ஆகிய நாங்கள் 10.05.1991 ஆம் திகதி கரவெட்டி ''அம்பம்'' வைத்தியசாலையில் பிறந்த எங்கள் மகன் சோ. தாருணன் **(S.THARUNAN)** என்பவரின் பெயரை இன்றிலிருந்து சோ. துசாந் **(S. THUSAANTH)** எனப் பெயர் மாற்றம் செய்கிறோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி

திரு. திருமதி சோமசுந்தரம்

(5689)

யாழ். மத்திய கல்லூரித் தமிழ்ச்சங்க அனுசரணையுடன

## எம்.டி.குணசேன புத்தகக் கண்காட்சி, விற்பனை

இன்றும் (16 செவ்வாய்) நாளையும் (17 புதன்) யாழ் மத்திய கல்லூரியில்
காலை 9.30 முதல் மாலை 6 வரை

தொடக்கி வைப்பவர் : திரு. க.இராசதுரை (அதிபர் யாழ். மத்திய கல்லூரி)

பிரதம விருந்தினர் : திரு. ஆ.இராஜகோபால (கோட்டக்கல்வி அதிகாரி, யாழ்

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை எல்லா நூல்களுக்கும்
10% விலைக்கழிவு

*சகல கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அன்போடு அழைக்கப்படுகின்றனர்.* [5688]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.